[7th July 1962

* 173. கேள்வி.—திரு. கோ. சி. மணி : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உச்சவரம்பிற்குமேல் உபரி நிலம் வைத்திருப்பவர்கள் தம்மிடமுள்ள உபரி நிலங்களின் விவரங்களை எந்த அதிகாரியிடம் தெரிவிப்பது ?

(இ) அந்த அதிகாரிகளை அரசாங்கம் நியமனம் செய்து விட்டதா ?

(உ) அந்த அதிகாரிகளிடம் உபரி நிலமுள்ள நிலச்சுவான் தார்கள் எத்தனை பேர் விவரம் தெரிவித்திருக்கிறார்கள் ?

(எ) நிலச்சுவாந்தார்கள் விவரம் தராவிட்டால் அரசாங்கமே இந்த விவரங்களைச் சேகரிக்கும் திட்டம் உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) They should furnish the particulars to the authorized officer within whose jurisdiction their holding or the major part thereof is situated.

(இ) The question of appointing officers to exercise the powers conferred on, and discharge the duties imposed upon, the "authorized officers" under the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, is under consideration.

(உ) Does not arise.

(எ) Yes. The authorized officers will have power to collect the particulars either by themselves or through such agency as they think fit.

* 174 *Q.*—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the steps taken to distribute surplus lands obtained by the enforcement of the land Ceiling Act to the landless labourers;

(*b*) the number of officers appointed for the implementation of the Act; and

(*c*) the expenditure incurred thereby?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, was published in the *Fort St. George Gazette*, dated 2nd May 1962. The Government will have to notify a date, within 90 days from which persons who, on 6th April 1960, held land exceeding 30 standard acres will have to submit returns, containing particulars of the land to the authorized officers. The authorized officers will thereafter follow the prescribed procedure and declare the surplus lands of persons holding land exceeding the ceiling limit. The disposal of the surplus lands acquired under the Act will be according to the rules to be framed under the Act. The question of notifying the date referred to above and the proposals for the employment of officers and staff to administer the Act are now under the consideration of the Government.

7th July 1962]

(c) The expenditure likely to be incurred on the officers and staff to administer the Act will be known only after the proposals for their employment are finalized.

பட்டாதார்கள் (தஞ்சை மாவட்டம்).

*186 கேள்வி.—திரு. கோ. சி. மணி : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ல் தஞ்சை மாவட்டத்தில் நஞ்சை, புஞ்சை நிலங்கள் உள்ள பட்டாதார்களின் எண்ணிக்கை என்ன ?

(இ) இதில் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கராவிற்குமேல் நிலம் உள்ளவர் எத்தனை பேர் ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) The particulars are not available. The time and labour involved in gathering the particulars will not be commensurate with the public purpose served. The member is, however, referred to the jamabandi report, which contains a statement showing the number of pattas of various values in the several districts of the State.

(இ) Particulars of persons holding more than 30 standard acres were gathered in 1959. They are of no use now, in view of the transactions that had taken place since. Such particulars will be available only after the implementation of the Land Ceiling Act.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : நிலவுடமை உச்சவரம்புச் சட்டத்தை அமுல் நடத்துவதில் கனம் அமைச்சர் அவர்கள் கூறிய விஷயத்திலிருந்து நான் தெரிந்து கொள்வது இதுவரைக்கும் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை எல்லாம் இந்தச் சட்டத்தை ஏப்ரல் மாதம் 2-ம் தேதி கெஜட்டில் பிரசுரித்தது ஒன்றுதான் என்று தெரிகிறது. 1960-வது வருஷம் ஏப்ரல் மாதம் சட்டம் அமுலுக்கு வரவேண்டியதிருக்க இவ்வளவு மந்தமாக நடவடிக்கைகள் எடுப்பதற்குக் காரணம் என்ன ? இன்னும் துரிதமாக நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

கனம் திரு. வி. ராமையா : கனம் அங்கத்தினர் இந்தச் சட்டத்தினால் ஏற்படக்கூடிய சிக்கல்களை உணர்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மந்தமாக எடுக்கவில்லை. இதைத் துரிதமாக அமுல் நடத்துவதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளையும், எவ்விதச் சிக்கலேயும் உண்டாக்காமல், எடுத்துக்கொள்ள இந்த அரசாங்கம் முன்வந்திருக்கிறது.

திரு. ஆர். ரங்கசாமி : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உச்சவரம்புச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குடும்பத்திலே, இந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கும் ஐந்து நபர்களுக்கு மேலுள்ள குழந்தைகளை எடுத்து, குழந்தை இல்லாதவர்களுக்கு விநியோகிக்க சர்க்கார் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன் (சிரிப்பு.)

(பதிலில்லை.)